**7ஆம் வகுப்பு** **கணிதம்**

## எண்ணியல்

### I. கொள்குறி வகை வினாக்கள்

1. $-999$ இன் முன்னி, 99இன் தொடரி ஆகியவற்றின் கூட்டுதொகை ________.
   i) $-1098$ ii) $-900$ iii) $-1100$ iv) $-898$

2. சீனர்களால் கி.மு(பொஆமு)100இல் காகிதம் கண்டுபிடிக்கப்பட்டது எனில் 2019 வரை எத்தனை ஆண்டுகள் ஆகின்றன?
   i)2020 ii)2019 iii)2011 iv)2119

3. $(-15)$இலிருந்து அதன் கூட்டல் எதிர்மறையைக் கழிக்க __________கிடைக்கும்
   i)30 ii) $-30$ iii) $-15$ iv)15

4. ஒரு நீர்மூழ்கி கப்பலானது நிமிடத்திற்கு 10மீட்டர் வீதம் கடல் மட்டத்திலிருந்து கீழ்நோக்கி செல்கிறது எனில், 7 நிமிடங்களுக்கு பின்னர் நீர்மூழ்கி கப்பல் சென்றடைந்த ஆழத்தைக் கணக்கிடுக.
   i) 7 மீ ii) 70 மீ iii) $-70$ மீ iv) $-7$ மீ

5. இரு முழுக்களின் கூட்டுத் தொகை $-5$, அவற்றில் ஒரு முழு $-4$ எனில் மற்றொரு, முழுவைக் காண்க?
   i) $-9$ ii) $-6$ iii) $-2$ iv) $-1$

6. ____________$\times(-50)=100\times20$
   i) $-40$ ii)50 iii) $-50$ iv)40

7. $(-12)\times[(-4)\times(-6)]=[(-12)\times(-4)]\times(-6)$ என்பது _________ பண்பின் அடிப்படையில் உண்மை.
   i)பெருக்கலின் பரிமாற்றுப் ii)பெருக்கலின் சேர்ப்புப்
   iii)பொருக்கலின் மீதான பங்கீட்டு iv)பெருக்கல் சமனி

8. $(-20)\div2=$ __________
   i)0 ii)10 iii) $-10$ iv)1

9. $28\div(-4)+5=$ _________
   i) $-7$ ii) $-2$ iii) $+2$ iv)12



LIVEWORKSHEETS

10. 50 கூழாங்கற்களுடன் அனிதா விளையாட தொடங்குகிறாள், முதல் 6 ஆட்டங்களில் தலா 5 கூழாங்கற்களை இழக்கிறாள் பின்பு 5 ஆட்டங்களில் தலா 4 கூழாங்கற்களை பெறுகிறாள் இறுதியில் அனிதாவிடம் இருந்த கூழாங்கற்களின் எண்ணிக்கை யாது?

i) $-50$ ii) 50 iii) 40 iv) $-40$

## II. கோடிட்ட இடங்களை பூர்த்தி செய்க

1. $-4 \div (+4) =$ _____
2. $(-5)+(+5) =$ ____
3. $(-6)\times(-4) =$ _____
4. எண்கோட்டில் $-50$ என்ற எண் பூஜ்யத்திற்கு _____ புறத்தில் அமைந்துள்ளது.
5. $-50$ ஐ _____ ஆல் வகுத்தால் கிடைக்கும் ஈவு 10.

## III. சரியா தவறா

6. $-50$ உம் $+(-50)$ உம் ஒரே எண்மதிப்பைக் குறிக்கும்.
7. ஒரு முழுவையும் அதன் கூட்டல் நேர்மாறையும் கூட்டினால் கிடைப்பது பூஜ்ஜியமாகும்.
8. முழுக்களின் கழித்தல் செயலில் முழுக்களின் வரிசையை மாற்றினாலும் அதன் மதிப்பு மாறாது.
9. மூன்று குறை முழுக்களின் பெருக்குத் தொகை ஒரு மிகை முழுவாக அமையும்.
10. $+15$ என்ற எண்ணை $-(-15)$ என்றும் எழுதலாம்.

## IV. பொருத்துக

| பிரிவு I | பிரிவு II |
|---|---|
| 11. (அ) $(-a)\div(-b)$ | (i) 'a' இன் கூட்டல் நேர்மாறு (ஈ) |
| 12. (ஆ) 1 | (ii) $-1$ (உ) |
| 13. (இ) 0 | (iii) $a \div b$ (அ) |
| 14. (ஈ) $-a$ | (iv) கூட்டல் சமனி (ஆ) |
| 15. (உ) $(a)\div(-a)$ | (v) பெருக்கல் சமனி (இ) |



LIVEWORKSHEETS